SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
குரோதி வருடம் கார்த்திகை 4 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 16
மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● செவ்வாய்க்கிழமை, நவம்பர் 19, 2024 ● வெளியூர்: 20-11-2024, புதன்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 132 ● 6 பக்கம் ● ரூ.6

## வங்கக்கடலில்

# 23ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகிறது

## வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, நவ. 19-**

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த மாதம் (அக்டோபர்) 15ந்தேதி தொடங்கியதாக அறிவிக்கப்பட்டாலும், பருவமழை தீவிரம் அடையவில்லை. இந்த மாதம் முதல் வாரத்தில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி பருவமழை தீவிரம் அடையும் என சொல்லப்பட்டது.

ஆனால் அந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகுவதிலேயே தாமதம் ஆனது. 3 முறை தள்ளிப்போய், கடந்த 11 ந்தேதி வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானது. இந்த தாழ்வுப்பகுதியால் தமிழ்நாட்டில் எதிர்பார்த்த அளவுக்கு மழை இல்லை. இதனால் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைவதில் மீண்டும் தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையில், வங்கக்கடலில் 23ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது அடுத்த 2 நாட்களில் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இது மேலும் தீவிரமடைந்து புயலாக வலுப்பெற வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி தமிழகத்தை நோக்கி வரும் பட்சத்தில் அதிக மழைப்பொழிவு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்துவரும் 23 நாட்களில் தமிழகத்தின் உள் மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திரா காந்தி பிறந்த நாள் விழா: கவர்னர், முதல்வர் மரியாதை



முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி பிறந்த நாள் விழா புதுச்சேரி அரசு சார்பில் தேசிய ஒருமைப்பாட்டு தின விழாவாக இன்று கொண்டாடப்பட்டது. இதனையொட்டி 100 அடி சாலை விழுப்புரம் சாலை சந்திப்பில் அமைந்துள்ள அவரது சிலைக்கு துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முதலமைச்சர் ரங்கசாமி, பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், வேளாண் அமைச்சர் ஜெயக்குமார், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சாய் ஜெ.சரவணன் குமார், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் ராஜவேலு, அரசு கொறடா ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் ரமேஷ், பாஸ்கர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் தேசிய ஒருமைப்பாட்டு தின உறுதி மொழியை வாசிக்க அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

## நெம்மேலியில் கடல் நீரை குடிநீராக்கும் ஆலையில் 16-வது நிதிக்குழு உறுப்பினர்கள் ஆய்வு



**சென்னை, நவ. 19-**

மத்திய அரசின் 16–வது நிதிக்குழு அதன் தலைவர் அரவிந்த் பனகாரியா தலைமையில் தமிழ்நாட்டுக்கு நேற்று முன்தினம் வந்தது. 11 உறுப்பினர்கள் அடங்கிய இந்த குழுவினர் சென்னை கிண்டியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தங்கினர். இதையடுத்து நேற்று தமிழக அரசுடன் நிதிக்குழு ஆலோசனை கூட்டம் நடத்தியது.

அப்போது வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த மாநில அரசுகளுக்கு வரி வருவாயில் 50 சதவீத பங்கு வழங்க வேண்டும் என்று மத்திய நிதிக்குழுவிடம் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார்.

இந்த நிலையில், செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அடுத்த நெம்மேலியில் உள்ள கடல் நீரை குடிநீராக்கும் ஆலையில் 16வது நிதிக்குழு உறுப்பினர்கள் ஆய்வு செய்தனர். அப்போது ஆலையில் இருந்து நாளொன்றுக்கு எவ்வளவு குடிநீர் உற்பத்தி செய்யப்படுகிறது, ஆலையின் செயல்பாடுகள், ஆலையின் விரிவாக்க பணிகள் எவ்வாறு நடைபெற்று வருகிறது என அதிகாரிகளிடம் நிதிக்குழுவினர் கேட்டறிந்தனர்.

பிற்பகல் சென்னையில் இருந்து மதுரைக்கு விமானம் மூலம் செல்கின்றனர். பிற்பகல் மதுரை விமான நிலையத்தில் இருந்து ராமேசுவரத்துக்கு கார் மூலம் செல்கின்றனர். அங்கு இரவு ராமநாதசுவாமி கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்கின்றனர். நாளை (புதன்கிழமை) காலை தங்கச்சிமடம் பஞ்சாயத்தில் அமைந்துள்ள பிரதமரின் கிராமப்புற வீடு கட்டும் திட்ட பணிகளை பார்வையிடுகின்றனர். பின்னர் ராமநாதபுரம் நகராட்சியை பார்வையிட்டுவிட்டு, பிற்பகலில் கீழடி அகழ்வாராய்ச்சியை ஆய்வு செய்கின்றனர். அதைத்தொடர்ந்து மதுரையில் இருந்து விமானம் மூலம் டெல்லி செல்கின்றனர்.

## பாராளுமன்றம் 25ந்தேதி கூடுகிறது மத்திய மந்திரி கிரண் ரிஜிஜு தகவல்

**புதுடெல்லி, நவ. 19-**

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் வருகிற 25ந்தேதி தொடங்கி டிசம்பர் 20ந்தேதி வரை நடக்கிறது. இந்த நிலையில் குளிர்கால கூட்டத்தொடர் சுமூகமாக நடத்துவது குறித்து ஆலோசிக்க அனைத்து கட்சிகள் கூட்டத்துக்கு பாராளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு அழைப்பு விடுத்துள்ளார்.

வருகிற 24ந்தேதி காலை 11 மணிக்கு பாராளுமன்ற வளாகத்தில் உள்ள கமிட்டி அறையில் இந்த கூட்டம் நடைபெறும் என்று தெரிவித்து உள்ளார்.

இந்த பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாவும், தற்போது பாராளுமன்ற கூட்டுக்குழு ஆய்வில் உள்ள வக்பு வாரிய மசோதாவும் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த 2 மசோதாக்களையும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்து வருகிறது.

மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் சட்டசபை தேர்தல் முடிந்த பிறகு இந்த கூட்டத்தொடர் நடைபெறுகிறது. இதனால் பல்வேறு விஷயங்கள் குறித்து பாராளுமன்றத்தில் அனல் பறக்கும் விவாதம் நடைபெறும் என்று கருதப்படுகிறது.

## திருப்பதி கோவிலில் இந்துக்கள் அல்லாத ஊழியர்களை பணி நீக்கம் செய்ய தேவஸ்தானம் முடிவு?

**திருப்பதி, நவ. 19-**

ஆந்திர மாநிலம் திருப்பதியில் ஏழுமலையான் கோவில் உள்ளது. உலக புகழ்பெற்ற இந்தக் கோவிலுக்கு தினமும் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்கிறார்கள். ஏழுமலையான் கோவில் நிர்வாகத்தை திருப்பதி தேவஸ்தானம் அறக்கட்டளை மேற்கொண்டு வருகிறது.

ஆந்திராவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதையடுத்து, திருப்பதி தேவஸ்தான அறங்காவல் குழு நிர்வாகிகள் புதிதாக நியமிக்கப்பட்டனர். புதிதாக நியமிக்கப்பட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்களின் முதல் கூட்டம் , தலைவர் பி.ஆர் நாயுடு தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், திருப்பதி கோவிலில் பணியாற்றும் இந்து அல்லாத பிற மத ஊழியர்களை பணி நீக்கம் செய்ய தேவஸ்தானம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியானது.

இது குறித்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர் நாயுடு, திருப்பதி கோவிலில் பணியாற்றும் இந்துக்கள் அல்லாத பிற மத ஊழியர்களை மாற்ற முடிவு செய்து இருக்கிறோம். ஆந்திர அரசிடம் அவர்கள் ஒப்படைக்கப்படுவார்கள்” என்றார். 2018 ஆம் ஆண்டு வெளியான அறிக்கையின் படி, திருப்பதி கோவிலில் 44 பிற மத ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள்.

## குஜராத்: தனியார் வேன் லாரி மீது மோதியதில் 6 பேர் பலி

**காந்திநகர், நவ. 19-**

குஜராத்தின் பரூச் மாவட்டத்தில் தனியார் வேன் லாரி மீது மோதியதில் 3 குழந்தைகள் உள்பட 6 பேர் உயிரிழந்தனர் மற்றும் 4 பேர் காயமடைந்தனர் என்று போலீசார் இன்று தெரிவித்துள்ளனர்.

நேற்று இரவு 11 மணியளவில் மக்னாட் கிராமத்திற்கு அருகிலுள்ள ஜம்புசார் அமோத் சாலையில் வேதாச் கிராமத்தை சேர்ந்த 10 பேர் சுக்லதீர்த் நோக்கி சென்றபோது விபத்து நடந்ததாக ஜம்புசார் காவல் நிலைய ஆய்வாளர் ஏவி பனாமியா தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், “மக்னாட் கிராமத்திற்கு அருகே சாலையின் இடது புறத்தில் நிறுத்தப்பட்டிருந்த லாரி மீது பயணிகளை ஏற்றி சென்ற தனியார் வேன் மோதியது. இந்த விபத்தில் 6 பயணிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 4 பேர் காயமடைந்தனர். அவர்கள் ஜம்புசாரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்கள் ஜெய்தேவ் கோஹில் (23), சரஸ்வதி கோஹில் (21), ஹன்சா ஜாதவ் (35), சந்தியா ஜாதவ் (11), விவேக் கோஹில் (16), கீர்த்தி கோஹில்(6)என அடையாளம்காணப்பட்டுள்ளனர்” என்றார். இந்த சம்பவம் பற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தொடர்ந்து 2வது நாளாக உயர்ந்த தங்கம் விலை

**சென்னை, நவ. 19-**

தங்கம் விலை இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்ட நிலையில், கடந்த மாதம் 30ம் தேதி ஒரு சவரன் ரூ.59 ஆயிரத்தை கடந்து புதிய உச்சம் பெற்றது. இதன் மூலம் தங்கம் விலை மீண்டும் வரலாறு காணாத புதிய உச்சத்தை எட்டியது. தொடர்ந்து தங்கம் விலை ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டு வந்த நிலையில், கடந்த சில தினங்களாக சரிவை சந்தித்து வருகிறது. நேற்று தங்கம் விலை சவரனுக்கு ரூ.480 உயர்ந்து ரூ.55,960க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில், தங்கம் விலை மேலும் உயர்ந்துள்ளது. அதன்படி, சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.560 உயர்ந்து ரூ.56,520க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.70 உயர்ந்து ரூ.7,065 க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை கிராமுக்கு 2 ரூபாய் உயர்ந்து ரூ.101க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# கட்டிடக்கலை வடிவமைப்பு புதுமைகள் மாநாடு



சங்கரன்கோவில், நவ. 19-

ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலையில், சிவில் இன்ஜினியரிங் மற்றும் கட்டிடக்கலை துறை சார்பில் "சிவில், மெட்டீரியல் மற்றும் கட்டிடக்கலை வடிவமைப்பில் சமீபத்திய கண்டுபிடிப்புகள்" (ஐசிஆர்ஐஎஇடி 2024) என்ற தலைப்பில் யுனிவர்சிட்டாஸ் இஸ்லாம், இந்தோனேசியா, ரங்சிட் பல்கலை, தாய்லாந்து, சமர்கண்ட் பல்கலை, உஸ்பெகிஸ்தான் மற்றும் ஃபாத்திஹ் சுல்தான் மெஹ்மத் வாகிஃப் பல்கலை, துருக்கி ஆகியவற்றுடன் இணைந்து, இரண்டு நாள் சர்வதேச மாநாடு நடைபெற்றது. துணைத் தலைவர் முனைவர் எஸ். சசி ஆனந்த், மாநாட்டை துவக்கி வைத்தும்," ஸ்மார்ட் டிரான்ஸ்போர்ட் சிஸ்ட மையத்தைத் "திறந்து வைத்தும் பேசினார். வெவ்வேறு துறைகளுடன் இணைந்த கூட்டு ஆராய்ச்சி அவசியம் என வலியுறுத்தினார் துணை தலைவர். துணைவேந்தர் முனைவர் எஸ்.நாராயணன், பதிவாளர் முனைவர் வி.வாசுதேவன், ஆர் –டி இயக்குனர் முனைவர் எம்.பள்ளிகொண்ட ராஜசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிவில் துறைத்தலைவர் பி. எல். மெய்யப்பன் வரவேற்புரையும், கட்டிடக்கலை துறைத்தலைவர் எல்.வினுபாண்டியன், இரண்டு நாள் மாநாட்டின் நிகழ்ச்சி விளக்கவுரையும் வழங்கினர்.

சிறப்பு விருந்தினர் சென்னை மெட்ரோ, நிப்பான் கம்பெனி ஆலோசகர், இஆர். எஸ். அறிவுசெல்வன், "மாநாட்டு ஆராய்ச்சி கட்டுரை மலரை "வெளியிட்டு பேசினார்.

கௌரவ விருந்தினர் இந்தோனேசியா பல்கலை, ஏஆர். ராபி மக்சயா, யுனிவர்சிட்டாஸ் இஸ்லாம் இந்தோனேசியா, பேராசிரியர் முஹம்மது இப்திரோனி மற்றும் டாக்டர் ஜார்வா பிரசேத்யா, சென்னை பாலாஜி அசோசியேட்ஸ் முனைவர் எல். ாலாஜி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

உலகெங்கிலும் உள்ள ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் தொழில்துறை நிர்வாகிகள் உட்பட 65 பிரதிநிதிகள் விவாதங்கள் மற்றும் விளக்கக்காட்சிகளில் பங்கேற்றனர். நிறைவு விழாவில், தலைமை விருந்தினர் , இந்திய பொறியாளர்கள் நிறுவனங்களின் மதுரை மைய தலைவர் முனைவர் பி.உதயகுமார், அனைவருக்கும் சான்றிதழ்களை வழங்கினார். டீன் முனைவர் எஸ்.ராஜேஷ் வரவேற்றார். ஏஆர். அஹமத் ஃபஸீல் அக்ரம் நன்றி கூறினார்.

### தீபாவளி உதவித்தொகை கிடைக்கப்பெறாத

# அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கு மீண்டும் ஓர் அறிய வாய்ப்பு

## நலச் சங்க தொழிலாளர் அதிகாரி தகவல்

புதுச்சேரி, நவ. 19-

புதுச்சேரி அமைப்புச்சாரா தொழிலாளர்கள் நலச் சங்க தொழிலாளர் அதிகாரி வேங்கடேசன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: புதுச்சேரி அமைப்புச்சாரா தொழிலாளர் நலச் சங்கத்தில் கடந்த 31–03–2024 வரை உறுப்பினராக பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு 2024ஆம் ஆண்டிற்கான புதுச்சேரி அரசு அறிவித்த தீபாவளி உதவித்தொகை ரூபாய் 1,500 உறுப்பினர்களின் வங்கி கணக்கின் மூலமாக 15–11–2024 முதல் 18–11–2024 வரை செலுத்தப்பட்டுவிட்டது. மேற்சொன்ன வங்கிகளின் கணக்கு வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் தீபாவளி உதவித்தொகை கிடைக்கப் பெறாத உறுப்பினர்கள், வருகின்ற 31–12–2024க்குள் கீழே கொடுக்கப்பட்டுள்ள அமைப்புச்சாரா நலச் சங்க அலுவலகத்தை நேரில் அணுகி தங்களின் உறுப்பினர் அடையாள அட்டை, 2024ஆம் ஆண்டிற்கான சந்தா கட்டிய ரசீது, தற்போது பயன்பாட்டில் உள்ள வங்கி கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அட்டை நகல்களை சமர்ப்பித்து சரிசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் உறுப்பினர்களுக்கு, இத்தொகையைப் பெறுவதற்கான கால அவகாசம் மேலும் நீட்டிக்கப்பட மாட்டாது என்றும், 2024ஆம் ஆண்டிற் கான தீபாவளி உதவித்தொகையை இச்சங்கத்தின் மூலம் மீண்டும் செலுத்த இயலாது. மேலும், உடனடியாக உறுப் பினர்கள் தங்களது வங்கிக்கணக்கினை உரியமுறையில் சரிசெய்து, இவ்வலு வலகத்தில் தெரிவித்து, இச்சலுகையை குறித்தகாலத்திற்குள் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது.

# இனச் சான்றிதழ் வழங்க காட்டுநாயக்கன் சமுதாய சீர்திருத்த சங்கத்தினர் கோரிக்கை



புதுச்சேரி, நவ. 19-

மாணவர்கள் பள்ளி படிப்பு மற்றும் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு ஜாதி சான்றிதழ் தேவைப்படுகிறது. இதன் அடிப்படையில் பழங்குடியினரான காட்டுநாயக்கன் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் இனச் சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கும் பொழுது உரிய விசாரணை மேற்கொண்டு காட்டுநாயக்கன் சமுதாய சீர்திருத்த சங்கத்திடம் கலந்து ஆலோசித்து உண்மை தன்மையை அறிந்து அவர்களுக்கு உரிய இனச் சான்றிதழ் வணங்கிட வேண்டும் என புதுச்சேரி முத்திரையர் பாளையம் காட்டுநாயக்கன் சமூக சீர்திருத்த சங்க தலைவர் சுரேஷ் மற்றும் செயலாளர் கண்ணன் ஆகியோர் வட்டாச்சியரிடம் கோரிக்கை மனு அளித்தனர். மேலும் கௌரவ தலைவர்கள் சுப்ராயலு, கலியமூர்த்தி, துணை தலைவர்கள் முத்தையன் நாகமுத்து, செயல் தலைவர் மதியழகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம் ரூ.2.34 கோடி முதலமைச்சர் ரங்கசாமி வழங்கல்



புதுச்சேரி, நவ. 19-

புதுவை விவசாயிகளுக்கு உற்பத்தி மானிய தொகையாக ரூ. 2.34 கோடி முதலமைச்சர் ரங்கசாமி வழங்கினார்.

புதுவை அரசு வேளாண்துறை பயிர் உற்பத்தி தொழில்நுட்பத் திட்டத்தின் கீழ் நெல், மணிலா, எள், பயறு வகைகள் சிறுதானிய பயிர்கள், கரும்பு, பருத்தி, தீவன புல் உற்பத்தி மானியம் வழங்கப்படுகிறது.

சொர்ணவாரி பருவத்தில் உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களுக்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வீதம் 2,558 விவசாயிகளுக்கு ரூ.2.16 கோடி, பாரம்பரிய நெல் ரகம் பயிரிட்ட 3 விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.8 ஆயிரம் வீதம் ரூ.17 லட்சத்து 12 ஆயிரம் அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தப்பட உள்ளது.

சொர்ணவாரி பருவத்தில் உயர் விளைச்சல் தரும் நெல் ரகம் பயிர் செய்த 205 அட்டவணை இன விவசாயிகளுக்கு ரூ.14.21 லட்சம் ஊக்கத் தொகையும் வழங்கப்பட உள்ளது. மேலும் சம்பா போகத்தில் நெல் விதை உற்பத்தி செய்த 16 விவசாயிகளுக்கு ரூ.3 லட்சத்து 74 ஆயிரம் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட உள்ளது.

ஒருங்கிணைந்த விதை உற்பத்தி சான்றளிப்பு திட்டத்திற்கு நெல் விதை உற்பத்தி செய்யும் விதை உற்பத்தியாளர்களுக்கு சான்று விதைக்கு கிலோவிற்கு ரூ.8 மற்றும் ஆதார விதைக்கு ரூ.12 மானியம் வீதம் விதை ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

இந்த தொகையை முதலமைச்சர் ரங்கசாமி விவசாயிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் அமைச்சர்கள் லட்சுமி நாராயணன், தேனீ. ஜெயக்குமார், பிஆர்என் திருமுருகன், அரசு கொறடா ஏ.கே.டி.ஆறுமுகம், பாஸ்கர் எம்.எல்.ஏ., கூடுதல் வேளாண் இயக்குனர் ஜாகீர் உசேன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கலைமாமணி முனைவர் சுந்தரமுருகனுக்கு திருக்குறள் பற்றாளர் விருது



புதுச்சேரி, நவ. 19-

உலக திருக்குறள் மன்றம் சார்பில் திருக்குறள் உலக சாதனை மாநாடு வேல்ராம்பட்டில் உள்ள ஒய்ஸ்மேன் பள்ளியில் நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற இம் மாநாட்டில் திருக்குறள் குறித்து சொற்பொழிவுகள் மற்றும் பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெற்றன. விழாவின் சிறப்பு அம்சமாக தொழிலதிபர் விஜி சந்தோஷம் வைஸ்மேன் பள்ளிக்கு திருவள்ளுவர் சிலையினை அன்பளிப்பாக வழங்கினார். இந்நிகழ்வினை முன்னிட்டு திருக்குறளுக்கு தொண்டாற்றிய 25 பேருக்கு திருக்குறள் பற்றாளர் விருது வழங்கப்பட்டது. அந்த வகையில் சாகித்திய அகாதெமியின் பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் கலைமாமணி முனைவர் சுந்தர முருகன், நண்பர்கள் தோட்டம் அமைப்பின் தலைவர் திருநாவுக்கரசு ஆகியோருக்கு திருக்குறள் பற்றாளர் விருதினை உலக திருக்குறள் மன்றத்தின் புதுச்சேரி தலைவர் வழக்குரைஞர் சந்திரமௌலி வழங்கினார். நிகழ்வில் வழக்குரைஞர் கார்த்திகேயன், ஆசிரியர் செல்வமணி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# 300 மரக்கன்றுகள் நடும் நிகழ்வு



தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் அய்யனடைப்பு ஊராட்சி சண்முகபுரத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம் 2024 -2025 கீழ் 300 மரக்கன்றுகள் நடும் நிகழ்வை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் மரக்கன்று நட்டு துவக்கி வைத்தார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஐஸ்வர்யா, அப்பனடைப்பு ஊராட்சி மன்றத்தலைவர் அதிஷ்ட கணபதி.

## தலையங்கம்

மாலை எக்ஸ்பிரஸ்

19.11.2024 (செவ்வாய்க்கிழமை)

# காய்கறி சாகுபடி பரப்பை அதிகரிக்க வேண்டும்

பணவீக்கம் என்றால் படித்தவர்களுக்கு மட்டுமே தெரியும், அது சாதாரண மக்களுக்கும் புரியவேண்டும் என்றால், 'விலைவாசி உயர்வு' என்றே போடவேண்டும் என்பார். காரணம், பணவீக்கத்தின் முக்கிய விளைவே விலைவாசி உயர்வுதான்.

பணவீக்கம் என்பது மாதந்தோறும் அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் நுகர்வோர் விலை குறியீட்டு எண், மொத்த விற்பனை விலை குறியீட்டு எண் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. பணவீக்கத்தை அடிப்படையாக வைத்துத்தான் மத்தியமாநில அரசாங்கங்களும், ரிசர்வ் வங்கியும் பல திட்டங்களை வகுக்கின்றன. வட்டி விகித மாற்றங்களைக்கூட ரிசர்வ் வங்கி பணவீக்கத்தின் அடிப்படையில்தான் அறிவிப்பதோடு, நிதிக்கொள்கையையும் வகுக்கிறது.

கடந்த அக்டோபர் மாதத்துக்கான பணவீக்கம் அகில இந்திய அளவில் 6.21 சதவீதமாக இருந்தது. இது 14 மாதங்களில் இல்லாத உயர்வாகும். கிராமப்புற பணவீக்கம், அதாவது விலைவாசி உயர்வு 6.68 சதவீதமாகவும், நகர்ப்புற பணவீக்கம் 5.62 சதவீதமாகவும் இருக்கிறது. விலைவாசி உயர்வு 4 சதவீதத்திற்குள் இருப்பதைத்தான் தாங்கக்கூடிய அளவாக ரிசர்வ் வங்கி கருதுகிறது. அதற்குமேல் கூடுதலாக 2 சதவீதம் இருக்கலாம் என்றாலும், இப்போது அதையும் தாண்டி சென்றுவிட்டது. இந்தியாவில் மணிப்பூரில்தான் விலைவாசி அதிகம் என்ற வகையில் அங்கு பணவீக்கம் 9.69 சதவீதமாக உள்ளது. டெல்லியில் 4.01 சதவீதமாகும். தமிழ்நாட்டில் அகில இந்திய சராசரி குறியீட்டைவிட அதிகமாக 6.32 சதவீதமாக இருக்கிறது.

இதுபோல, மொத்த விற்பனை விலை குறியீட்டு எண் கடந்த 4 மாதங்களில் இல்லாத அளவாக கடந்த அக்டோபர் மாதத்தில் 2.36 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பணவீக்கம் அதிகமாக இருப்பதற்கு உணவுபொருட்கள், குறிப்பாக காய்கறி விலை உயர்வும், சமையல் எண்ணெய் விலை உயர்வுமே காரணம். தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற காய்கறி விலை மிக அதிகமாக உயர்ந்துள்ளது. அதைவைத்து கணக்கிட்டால், கடந்த ஆண்டு பணவீக்கம் 26 சதவீதமாக இருந்தநிலையில், அக்டோபர் மாதத்தில் 42 சதவீதமாக எகிறியது.

தக்காளி பெருமளவில் சாகுபடி செய்யப்படும் கர்நாடகா, மராட்டிய மாநிலங்களில் பெய்த பெருமழையால் விளைச்சல் பாதிக்கப்பட்டு, விலையும் உயர்ந்தது. சமையல் எண்ணெயை பொறுத்தவரை, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. கடந்த செப்டம்பர் மாதத்தில் கச்சா சமையல் எண்ணெய் இறக்குமதிக்கு சுங்க வரி இல்லை என்ற நிலைமாறி, அக்டோபர் மாதத்தில் 20 சதவீதம் விதிக்கப்பட்டது. இதுபோல, சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய்க்கு 12.5 சதவீதமாக இருந்த வரி 32.5 சதவீதமாக உயர்த்தப்பட்டது. தானிய வகைகளின் விலையும் அதிகரித்தது.

எனவே, விலைவாசி உயர்வை உடனடியாக குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். காய்கறி, தானியங்கள் அதிகம் விளையும் மாநிலங்களில் இருந்து, பிற மாநிலங்களுக்கு சிறப்பு சரக்கு ரெயில் மூலம் கொண்டுசென்று மக்களுக்கு குறைந்த விலையில் வழங்கவேண்டும். மக்கள் தொகை உயர்வை கணக்கில்கொண்டு, காய்கறி சாகுபடி பரப்பை நாடு முழுவதும் அதிகரிக்கவும், உற்பத்தி செய்யப்படும் காய்கறி வகைகளை பதப்படுத்த அதிகஅளவில் குளிர்பதன சேமிப்பு கிடங்குகளை தொடங்கவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

# மாடுகளை சாலையில் திரியவிட்டால் அபராதம்

## உழவர்கரை நகராட்சி ஆணையர் எச்சரிக்கை

புதுச்சேரி, நவ. 19-

உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: மாடுகள் சாலைகளில் திரிய விடுவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு அதிக அளவில் விபத்துக்கள் நிகழ்வதால் உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மாடுகள் வளர்ப்போர் தங்கள் மாடுகளை சாலைகள் மற்றும் பொது இடங்களில் திரிய விட வேண்டாம் என்றும் நகராட்சியில் உரிமம் பெற்று தங்களுக்கு சொந்தமான இடத்திலேயே சுகாதாரமான முறையில் வளர்க்குமாறும், தவறினால் மாடுகள் பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்து அபராதம் விதிக்கப்படும் என்று இந்நகராட்சி பல்வேறு செய்தி குறிப்பு மூலம் எச்சரிக்கை செய்திருந்தது. அதனை பொருட்படுத்தாமல் சாலையில் சுற்றி திரிந்த 108 மாடுகள் இதுவரை பிடிக்கப்பட்டு உரிமையாளர்களிடமிருந்து ரூபாய் 2,61,420 அபராதம் வசூலிக்கப்பட்டு, மாடுகளை இனிமேல் சாலையில் சுற்றி திரிய விடமாட்டோம் என்று உறுதிமொழி பெற்ற பின்னர் மாடுகள் விடுவிக்கப்பட்டது. இருப்பினும் மாடுகள் தொடர்ந்து சாலைகளில் சுற்றி திரிவதால் பொதுமக்கள், தினசரி நாளேடுகள் மற்றும் தொலைக்காட்சி செய்திகள் வாயிலாக தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால் சாலையில் சுற்றித்திறியும் மாடுகளை பிடிக்க வரும் வாரத்தில் நகராட்சி சிறப்பு நடவடிக்கைகள் எடுக்க உள்ளது. அதன்படி இந்நகராட்சியால் மாடுகள் பிடிக்கப்பட்டால் அதன் உரிமையாளர் மீது காவல்துறையில் புகார் அளிப்பதோடு அதிகபட்ச அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

எனவே மாட்டின் உரிமையாளர்கள் தங்களின் மாடுகளை சாலையில் திரியவிடவேண்டாம். மேலும் தங்களுக்கு சொந்தமான இடத்தில சுகாதாரமான முறையில் வளர்க்குமாறு மீண்டும் அறிவுறுத்தப்படுகிறது.

# காமராஜர் சாலையில் பாதாள சாக்கடை பணி

## நேரு எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்



புதுச்சேரி, நவ. 19-

புதுச்சேரி உருளையன்பேட்டை தொகுதிக்குட்பட்ட காமராஜர் சாலை ராஜா திரையரங்கம் முதல் உப்பனாறு வாய்க்கால் வரை இது நாள் வரை பாதாள கழிவுநீர் தொட்டிகள் மற்றும் குழாய்கள் அமைக்கப்படாமல் இருந்தது.

திரையரங்குகள், உணவகங்கள் மற்றும் வியாபார நிறுவனங்களின் பாதாள கழிவுநீர் இணைப்புகள் மக்கள் அதிக அளவில் வசிக்கும் பகுதிகளான திருமுடிநகர், பாரதிபுரம் மெயின் ரோடு, பகத்சிங் வீதி, கல்வே பங்களா மெயின் ரோடு மற்றும் நேரு நகர் போன்ற வீதிகளின் வழியாக பாதாள கழிவுநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டு அதன் மூலம் கழிவுநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதனால் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் அடிக்கடி பாதாள கழிவுநீர் தொட்டிகளில் அடைப்புகள் ஏற்பட்டு கழிவுநீர் வீதிகளில் வழிந்து ஓடியது. இதனால் மக்கள் மிகவும் அவதிப்பட்டு வந்தனர். இதையறிந்த தொகுதி எம்.எல்.ஏ., நேரு கடந்த சட்டசபை கூட்டத்தொடரில் கோரிக்கைகள் வைத்தார். இதன்பேரில் பொதுப்பணித்துறை பொது சுகாதார கழிவு நீருக்குட்பட்ட பிரிவின் மூலம் ரூ.25 லட்சத்தில் காமராஜர் சாலை ராஜா திரையரங்கு முதல் உப்பனாறு வாய்க்கால் வரை புதிய பாதாள கழிவுநீர் தொட்டிகள் மற்றும் குழாய்கள் அமைக்கும் பணிகள் நடைபெற உள்ளது.

இதற்கான பூமி பூஜை விழாவில் நேரு எம்.எல்.ஏ., கலந்துகொண்டு பணிகளை தொடங்கி வைத்தார். விழாவில் பொதுப்பணித்துறை பொது சுகாதார பிரிவு செயற்பொறியாளர் உமாபதி, கழிவுநீர் உட்கோட்ட பிரிவு உதவி பொறியாளர் வைத்தியநாதன், இளநிலை பொறியாளர் சங்கர், மனிதநேய மக்கள் சேவை இயக்க நிர்வாகிகள், மகளிர், இளைஞர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# புனித பேட்ரிக் பள்ளியில் விளையாட்டு போட்டி பரிசளிப்பு



புதுச்சேரி, நவ. 19-

புனித பேட்ரிக் முதுநிலைப் பள்ளியில் வழக்கமான உற்சாகத்துடன் குழந்தைகள் தின விழா பள்ளியின் வெள்ளி விழா கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக புதுவை அரசு பள்ளிக்கல்வி இயக்கக இயக்குனர் பிரியதர்ஷினி, தலைமை விருந்தினராக அருட்தந்தை ஜோசப் பால், ஜிப்மர் மருத்துவமனை பேராசிரியர் மருத்துவர் வெங்கட்ராமன், பள்ளியின் முன்னாள் மாணவரும் அப்பல்லோ மருத்துவமனை இணை ஆலோசகருமான மருத்துவர் பாலச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சக அறிவியல் அருங்காட்சியகச் சபை சார்பாக நடைபெற்ற அறிவியல் நாடக விழாவில் சிறந்த இயக்குநருக்கான விருது பெற்ற ஓவிய ஆசிரியர் கலைமாமணி சரவணக்குமார், தேசிய அளவில் நடைபெற்ற அவந்திகா போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்ற 47 மாணவர்களுக்கும், ஓவியக் கண்காட்சியில் கலந்துகொண்ட 17 சிறந்த இளம் ஓவியர்களுக்கும் விளையாட்டு மற்றும் பேச்சுப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பரிசுகளை வழங்கி குழந்தைகள் தின விழா குறித்து சிறப்புரையாற்றி சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சிக்கு முன்னதாக பள்ளியின் தாளாளர் பிரடெரிக், சிறப்பு விருந்தினர்களை வரவேற்று பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். பள்ளியின் முதல்வர் ஸ்டெல்லா வாழ்த்துரை வழங்கினார். குழந்தைகள் தினச் சிறப்பினை நான்காம் வகுப்பு மாணவி ஜானவி ஆங்கிலத்திலும், இரண்டாம் வகுப்பு மாணவன் பிரனேஷ் தமிழிலும் வழங்கினர். நிகழ்ச்சியினை ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் ஷன்விகா, சித்தார்த் அண்ணாமலை, லக் ஷா மற்றும் நான்காம் வகுப்பு மாணவன் ஹரிஹரன் ஆகியோர் தொகுத்து வழங்கினர். மூன்றாம் வகுப்பு மாணவி சுகிர்த்தி நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளியின் மருத்துவ இயக்குனர் ஜீட்டா பிரடெரிக் மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், இருபால் ஆசிரியர் பெருமக்கள், பெற்றோர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியைகள் மற்றும் தன்னார்வலர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# காரைக்காலில் கடந்த சில மாதங்களாக திருட்டுப்போன 50 செல்போன்கள் மீட்பு



காரைக்கால், நவ. 19-

காரைக்காலில் கடந்த சில மாதங்களில் திருட்டுப் போன மற்றும் காணாமல் போன 50 செல்போன்கள் மீட்கப்பட்டு, நேற்று உரியவர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

காரைக்கால் மாவட்டத்தில், கடந்த சில மாதங்களாக, பல்வேறு இடங்களில், பல்வேறு வகைகளில் ஏராளமான செல்போன்கள் திருட்டு போனதாகவும் மற்றும் காணாமல் போனதாகவும், அதை மீட்டு தரவேண்டும் என, காரைக்கால் நகர காவல்நிலையம், கோட்டுச்சேரி, நெடுங்காடு திருநள்ளாறு, திரு.பட்டினம், நிரவி உள்ளிட்ட காவல்நிலையங்களுக்கு புகார்கள் வந்தது. அதன் அடிப்படையில், மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு சவுஜன்யா உத்தரவின் பேரில், இணையவழி குற்றங்கள் தடுப்பு பிரிவு போலீசார் மூலம் பல்வேறு பகுதிகளில் விசாரணை செய்து, தொலைந்துபோன செல்போன்களை அதன் செல் போன் எண்ணை, இ.எம்.ஐ எண்ணை கொண்டு தேடி வந்தனர்.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக போலீசாரின் தீவிர தேடுதல் வேட்டையில், ரூ.5 லட்சம் மதிப்பிலான 50 ஆண்ட்ராய்டு செல்போன்களை போலீசார் மீட்டனர். தொடர்ந்து, மீட்கப்பட்ட செல்போன் களை உரியவர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி, காரைக்கால் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, சீனியர் போலீஸ் சூப்பிரண்டு சவுஜன்யா தலைமை தாங்கி, மீட்கப்பட்ட செல்போன்களை உரியவர் களிடம் ஒப்படைத்தார். நிகழ்ச்சியில், போலீஸ் சூப்பிரண்டுகள் சுப்பிரமணியன் மற்றும் போலீசார் கலந்துகொண்டனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்



கோவை, நவ. 19-

கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி, பெரிய கடைவீதி பகுதி 2, 80வது வார்டுக்கு உட்பட்ட செல்வபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மற்றும் கெம்பட்டி காலனி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில், வாக்காளர் பட்டியலில் விடுபட்டவர்கள் மற்றும் புதியதாக பெயர் சேர்ப்பு முகாம் நடைபெற்றது. முகாமை கோவை மாநகர் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளரும், கோவை மாநகராட்சி பொது சுகாதார குழு தலைவர் பெ. மாரிசெல்வன் நேரில் சென்று பெயர் மற்றும் முகவரி திருத்தம் செய்யவும், பெயர் நீக்கம் செய்திடவும், வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்று வரும், வாக்காளர் சிறப்பு முகாமைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில், மாநில தீர்மானக் குழு இணை செயலாளர் பா.நாச்சிமுத்து, 80 வது வட்டக் கழக செயலாளர் நா. தங்கவேலன், பெரிய கடைவீதி பகுதி 2 செயலாளர் வி.ஐ. பதுரூதீன், பெரியகடை வீதி பகுதி 2 துணை செயலாளர் என்.ஜே. முருகேசன் பிஎல்ஏ2 நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# அதிமுக வடக்கு ஒன்றிய கலை பிரிவு செயலாளராக அம்பலவாணன் தேர்வு



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வடக்கு ஒன்றிய கலை பிரிவு செயலாளராக கீரிமேடு அம்பலவாணனை அதிமுக தலைமை அறிவிப்பு செய்தது. அப்பகுதி அதிமுக தொண்டர்கள், நண்பர்கள் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். இவர் கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் குமரகுருவை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# தாய்மார்கள், மாற்றுத்திறனாளிகள் அளிக்கும் மனுக்களுக்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்: அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவு



திருவண்ணாமலை, நவ. 19-

திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் வாராந்திர மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு தனியாக இருக்கைகள் அமைத்து, அமரவைக்கப்பட்டு அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் பெற்றுக் கொண்டு அதற்கான தீர்வுகளை உடனடியாக வழங்க மாற்றுத் திறனாளிகள் நல அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

மேலும் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் கல்வி உதவித் தொகை, வங்கிக் கடனுதவி, முதியோர் உதவித் தொகை, வீட்டு மனைப்பட்டா, சாதிச்சான்று, வேலை வாய்ப்பு, விதவை உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகளு க்கான உதவித் தொகை மற்றும் உபகரணங்கள், சாலை வசதிகள், பிரதான் மந்திரியின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், வேளாண்மை துறை சார்ந்த பயிர்க்கடன்கள், புதிய நீர்தேக்க தொட்டி அமைத்து தருதல், தாட்கோ மூலம் கடனுதவி, கூட்டுறவு சங்ககளில் பயிர் கடன்கள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 616 மனுக்கள் பெறப்பட்டது. இக்கூட்டத்தில் பெண்கள், வயதானவர்கள், கைக்குழந்தை வைத்திருக்கும் தாய்மார்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கும் முன்னுரிமை அளித்து அவர்களை அமர வைத்து மனுக்களை பெறுவதோடு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அரசு துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தலின் படி இன்று செய்யார் சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 69மனுக்களும், ஆரணி வருவாய்கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 63 மனுக்களும் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அனைத்து அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# துவாக்குடிமலை குழந்தையேசு பள்ளியில் குழந்தைகள் தின விழா



தஞ்சாவூர், நவ. 19-

திருச்சி துவாக்குடிமலை குழந்தையேசு தொடக்கப்பள்ளியில் குழந்தைகள் தின விழா பள்ளி தாளாளர் ஜோஸ்பின்மேரி தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் ரேச்சல் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக முனைவர் வழக்கறிஞர் ஆனந்தராஜா கலந்துகொண்டு மாணவர்களுக்கு கல்வியின் அவசியம் மற்றும் விளையாட்டுப் போட்டிகளின் முக்கியத்துவம் குறித்து சிறப்புரையாற்றினார்.

# IND vs AUS, Perth Test: ‘We are ready’ – Alex Carey says Australia want to win back the Border-Gavaskar Trophy

New Delhi, Nov. 19

Alex Carey says the Australian cricket team is “primed” and “ready” to win back the Border-Gavaskar Trophy this time around with first Test starting from Friday at Perth’s Optus Stadium.

“I think we are primed, we’re ready,” Carey told SEN WA’s The Run Home.

“It’s a really consistent group of players we’ve got in this test team over the last number of years, and I’m excited to see this test team come Friday.

“The guys are looking primed and ready to go for Friday,” he added.

Carey says despite the shock 3-0 series loss at home against New Zealand, the Australian team will not take India lightly, especially what they pulled off last time. India vs Australia: Team India emerged victorious in the last Border-Gavaskar Trophy Down Under in 2021.

“They’re a really good cricket team, so they’ll be looking to bounce back from that series, as you mentioned, against New Zealand. They do have really good form in Australia, so it’s really a great opportunity for this playing group to win back the Border-Gavaskar trophy,” he said.

India will be without Rohit Sharma, who has stayed in India for the birth of his second child, and Shubman Gill, who is ruled out due to injury.

“They’ve got lots of class in the squad, so whoever does come in will be a solid player,” said Carey.

The Australian keeper is excited to see how Test debutant and his fellow South Australian teammate Nathan McSweeney .

“He’s in great form, he’s a great person to have around any team, and I’m really excited to see what he can do,” said Carey.

# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி ஏற்பு



தேசிய ஒருமைப்பாட்டு தினத்தை முன்னிட்டு துணைநிலை ஆளுநர் மாளிகையில் தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி எடுக்கப்பட்டது. துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் உறுதிமொழியை வாசிக்க அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். துணைநிலை ஆளுநரின் செயலர் நெடுஞ்செழியன் மற்றும் தனிச் செயலர் மாணிக்கதீபன் ஆகியோர் உடனிருந்தனர்.

## 27வது ஜேகே டயர் தேசிய கார் பந்தய போட்டி

# எல்ஜிபி பார்முலா 4 பிரிவில் டிஜில் ராவ்; ராயல் என்பீல்டு ஜிடி கான்டினென்டல் கோப்பை பிரிவில் நவநீத் சாம்பியன்




**கோவை, நவ. 19-**

கோவை காரி மோட்டார் ஸ்பீட் வேயில் 27வது ஜேகே டயர் தேசிய கார் பந்தய சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் எல்ஜிபி பார்முலா 4 பிரிவில் டிஜில் ராவ் மற்றும் ராயல் என்பீல்டு ஜிடி கான்டினென்டல் கோப்பை பிரிவில் நவநீத் ஆகியோர் சாம்பியன் பட்டம் வென்றனர். கோவையில் நடைபெற்ற இறுதிச் சுற்றுப் போட்டிக்கு முன்பே 22 வயதான பெங்களூரைச் சேர்ந்த இளம் வீரர் டிஜில் ராவ் ஏற்கனவே அதிக புள்ளி களை பெற்றிருந்த நிலையில் நேற்றைய போட்டியின் இவரது துவக்கம் உற்சாகமாக இருந்தது. அனுபவம் வாய்ந்த பந்தய வீரர் சரண் விக்ரம் நேற்றைய முதல் மற்றும் இரண்டாவது போட்டிகளில் வெற்றி பெற்ற போதிலும், அதுகுறித்து டிஜில் சிறிதும் கவலைப்படாமல் இருந்தார். சாம்பியன்ஷிப் கோப்பை தனக்கே என்று உறுதியான நிலையில், கடின முயற்சியால் எந்தப் பயனும் இல்லை என்பதை அவர் உணர்ந்திருந் தார். இந்த வெற்றி குறித்து டிஜில் கூறுகையில், இந்த சீசன் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தரும் வகையில் அமைந்தது. இவ்வளவு சிறப்பான போட்டியை நடத்தியதற்காக எனது குழுவிற்கும், ஜே.கே. டயர் நிறுவனத் திற்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். இதில் முக்கிய விஷயம் என்னவென் றால் நான் எனது உடலை கட்டுக்கோப் பாக வைத்திருந்த காரணத்தால் அது எனக்கு ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 7 வருடங்களாக நான் போட்டிகளில் பங்கேற்று வருகிறேன். அந்த வகையில் இந்த சீசன் என்னால் மறக்க முடியாத ஒரு சீசன் என்று தெரிவித்தார். அவருக்கு அவரது பெற்றோர் தங்களது வாழ்த்துக்களை தெரிவித் துக் கொண்டனர். உண்மையில், காலை போட்டி துவங்கியவுடன் மொமண் டம் மோட்டார் ஸ்போர்ட்ஸ் அணி யைச் சேர்ந்த சரண் விக்ரம் சிறப்பாக காரை ஓட்டி அனைவரையும் ஆச்சரி யத்தில் ஆழ்த்தினார். முதல் பந்தயத் தின் ஒரு கட்டத்தில், அவரை மெஹுல் அகர்வால் மற்றும் டிஜில் ராவ் ஆகியோர் நெருங்கினர். ஆனால் பின்னர், டிஜில் எதையும் அதிகமாகச் செய்து முன்னேற முயற்சிக்கவில்லை. சரண் 21:24.212 நிமிடங்கள், மெகுல் அகர்வால் 21:25.349 மற்றும் டிஜில் ராவ் 21:25,545 என்ற வித்தியாசத்தில் போட்டியை நிறைவு செய்தனர். போட்டி குறித்து சரண் கூறுகையில், நான் கடைசிப் போட்டியில் வெற்றி பெற்றது என்பது எனக்கும் எனது அப்பாவுக்கும் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியாக உள்ளது. இதில் ஏராள மான வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவித்தார். எல்ஜிபி பார் முலா 4 பந்தயத்தில் ஒட்டுமொத்தமாக வீரர் கள் எடுத்த புள்ளிகளைப் பொறுத்த வரை 87 புள்ளிகளுடன் டிஜில் ராவ் முதல் இடத்திலும், அதைத் தொடர்ந்து 45 புள்ளிகளுடன் பால பிரசாத் இரண்டாவது இடத்திலும், 44 புள்ளிகளுடன் மெஹுல் அகர் வால் மூன்றாவது இடத்திலும் உள்ள னர். இதில் பாண்டிச்சேரியை சேர்ந்த நவநீத் குமார், 10 சுற்றுகளை 13:01.601 நிமிடங்களில் கடந்து முதலிடம் பிடித்தார். அவரைத் தொடர்ந்து 13:02.411 நிமிடங்களில் அனிஷ் ஷெட்டி மற்றும் 13:02.503 நிமிடங் களில் மன்வித் ரெட்டி ஆகியோர் கடந்து இரண்டு மற்றும் மூன்றாம் இடம் பிடித்தனர். நவநீத் முதன் முறையாக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், சாம்பியன்ஷிப் பட் டத்தை வென்றதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது என்றார். ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் போட்டிகளில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களுக்கு இழுபறி நிலவியது. அனிஷ் ஷெட்டி மற்றும் ரோஹன் ஆகிய இருவரும் தலா 36 புள்ளிக ளுடன் சமநிலையில் இருந்தனர். இருப்பினும், அனிஷ் ஒரு பந்தயத்தில் எடுத்த புள்ளிகளை ரோஹன் இரண்டு பந்தயங்களில் பெற்றதால், அனிஷ் ஒட்டுமொத்தமாக இரண்டாவதாக அறிவிக்கப்பட்டார்.

# காரைக்கால் கலெக்டர் 2ம் நாளாக சைக்களில் சென்று குப்பைகள் சுத்தம் செய்யப்படுவதை ஆய்வு




**காரைக்கால் நவ. 19-**

காரைக்கால் மாவட்ட கலெக்டர் மணிகண்டன் 2ம் நாளாக அதிகாலை முதல் சைக்களில் சென்று குப்பைகள் சுத்தம் செய்யப்படுவதை ஆய்வு செய்தார்.

காரைக்கால் மாவட்டத்தில் சாலைகளில் உள்ள குப்பையில் சரியாக அள்ளப்படுவதில்லை என பொதுமக்களிடமிருந்து வந்த தொடர் புகாரை அடுத்து, கடந்த 16ந் தேதி அதிகாலை முதல், மாவட்ட கலெக்டர் மணிகண்டன் திடீரென சைக்கிளில் பயணம் செய்து, நகர் பகுதியில் சாலையில் தேங்கி கிடக்கும் குப்பைகளை ஆய்வு செய்தார். மேலும், சாலைகளில் நடந்து சென்ற பொது மக்களிடம் இப்பகுதிகளில் தினசரி குப்பைகள் சுத்தம் செய்யப்படுகிறதா? என கேட்டறிந்தார். அதேபோல் ஒரு சில சாலையில் குப்பைகளை சுத்தம் செய்து கொண்டிருந்த தனியார் நிறுவன ஊழியர்களிடம் நலம் விசாரித்து, குப்பைகளை வீடுகள் தோறும் மட்டுமின்றி சாலைகளிலும் தினசரி சுத்தம் செய்ய வேண்டும். குறிப்பாக கையுறைகள் அணிந்து குப்பைகளை சுத்தம் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் சாலைகளில் குப்பைகளை தேங்காய் விடக்கூடாது. மழைக்காலம் என்பதால் குப்பைகளை தேங்காவிட்டால் அவை சாக்கடையில் கலந்து சாக்கடை அடைப்பிற்கு வழிவகுக்கும். எனவே குப்பைகளை தேங்காய் விடாமல் சுத்தம் செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார். தொடர்ந்து, 2ம் நாளாக மாவட்ட கலெக்டர் மணிகண்டன், நேற்று அதிகாலை முதல் சைக்களில் சென்று குப்பைகள் சுத்தம் செய்யப்படுவதை ஆய்வு செய்தார். குறிப்பாக, காரைக்கால் ஞானப்பிரகாசம் வீதி, மதகடி, சுண்ணாம்பு கார வீதி, டூப்லெக்ஸ் வீதி, பாரதி நகர், கடற்கரை சாலை, சுபாஷ் சந்திர போஸ் சாலை, பள்ளிவாசல், திருநள்ளாறு ரோடு மற்றும் அம்பேத்கர் வீதி மற்றும் பல்வேறு வீதிகளில் அதிரடியாக ஆய்வு செய்தார்கள். அப்போது பல்வேறு இடங்களில் குப்பைகள் தேங்கி இருந்தால் அதனை உடனடியாக அப்புறப்படுத்த உத்தரவிட்டார்கள். சில இடங்களில் வடிகால் வாய்க்காலில் குப்பைகள் தேங்கி இருந்ததால் அதனை அப்புறப்படுத்த உத்தரவிட்டார். ஆய்வின்போது, நகராட்சி மற்றும் எச்ச ஸ்கொயர் நிறுவன அதிகாரிகள் கலந்துகொண்டனர். ஆய்வின் போது பொதுமக்கள் கலெக்டரிடம் குப்பைகளோடு சாலைகள் மின்விளக்குகள் மற்றும் தரமான ரேஷன் அரிசி வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

# எல்.பி.ஜி பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி




**புதுச்சேரி, நவ. 19-**

இந்திரா இண்டன் சர்வீஸ் மற்றும் தந்தை பெரியார் மேல்நிலைப்பள்ளி அரியாங்குப்பம் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் எல்.பி.ஜி பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்திரா இண்டன் சர்வீஸ் மற்றும் தந்தை பெரியார் மேல்நிலைப் பள்ளியின் அரியாங்குப்பம் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் சமையல் எரிவாயு சிலிண்டர் கையாள்வது மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பள்ளியின் துணை முதல்வர் விஜயா தலைமை தாங்கினார். NSS நிகழ்ச்சி அதிகாரி பார்த்தி, விரிவுரையாளர்கள் சுப்ரமணியன், கார்த்திகேயன், குணவதி, நூலக அலுவலர் ஐயப்பன், இந்திரா இண்டேன் சர்வீஸ் மேலாளர் உமா ஆகியோர் மாணவிகளுக்கு LPG பாதுகாப்பு பற்றி விளக்கினர். இவ்விழாவில் இந்திரா இண்டன் சர்வீஸ் பரசுராமன், மாநில NSS அதிகாரி சதிஷ்குமார், மற்றும் முன்னாள் ஆசிரியர் தேசிய விருதாளர் ஆசிரியர் திலகவதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவின் ஏற்பாடுகளை பள்ளியின் NSS அதிகாரிகள் செய்திருந்தனர். இதில் 90க்கும் மாணவிகள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 501 பேர் மனு



**கடலூர், நவ. 19-**

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, பொதுமக்களின் குறைகளை களைவதற்காகவும், பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியான பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் திங்கள்கிழமை தோறும் நடைபெற்று வருகிறது.

இன்றைய கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 501 மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந் தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி தகுதியான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், துணை ஆட்சியர் (ச.பா.தி) ரமா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சங்கர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் ராணி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தலைமைச் செயலகத்தில் தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி ஏற்பு



**புதுச்சேரி, நவ. 19-**

புதுச்சேரி அரசு சார்பில் தேசிய ஒருமைப்பாட்டு வாரம் நவம்பர் 19ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரை கடைபிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு புதுச்சேரி அரசு, தலைமைச் செயலகத்தில் தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழி ஏற்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

தலைமைச் செயலர் சரத் சவுகான் உறுதிமொழியை வாசிக்க தலைமைச் செயலக ஊழியர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து அரசுச் செயலர் சுந்தரேசன், உறுதிமொழியை தமிழில் வாசிக்க அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அரசுச் செயலர்கள் மற்றும் தலைமைச் செயலக அனைத்து ஊழியர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



**தென்காசி, நவ. 19-**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது. மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிட மிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக் கொண்டார்.

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் தேசிய அறக்கட்டளை, உள்ளூர் குழு சார்பில் 2 பயனாளி களுக்கு மனவளர்ச்சி குன்றிய நபர்களுக்கான பாதுகாவலர் நியமனச் சான்றுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கமல் கிஷோர் வழங்கினார் கள்.மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 410 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் கமல் கிஷோர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முத்துராமலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வக்குமார், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஷேக் அயூப் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# இடஒதுக்கீடு போராட்டத்தில் உயிர்நீத்த 21 சமூக நீதி போராளிகளுக்கான மணிமண்டபத்தை ஆய்வு செய்த அமைச்சர்



**விழுப்புரம், நவ. 19–**

விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டியில் அமைந்துள்ள ஏ கோவிந்தசாமி மணிமண்டபம் மற்றும் இட ஒதுக்கீடு போராட்டத் தில் உயிர் நீத்த 21 சமூக நீதி போராளிகளின் மணி மண்டபத்தில் நேரில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார் செய்தித் துறை அமைச்சர் மு.பெ சாமிநாதன். மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தலைமையில் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் வி.ராஜாராமன், செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி கே. எஸ்.மஸ்தான், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா ஆகியோர் முன்னிலையில், விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டியில், முன்னாள் அமைச்சரும் ஏழை எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பெரும் பங்காற்றி மறைந்த தலைவர் .ஏ.கோவிந்தசாமி திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு அரங்கம் மற்றும் இடஒதுக்கீடு போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் உயிர்நீத்த 21 சமூக நீதி போராளிகளுக்கான மணிமண்ட பத்தினை ஆய்வு செய்தார். தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் 02.09.2021 அன்று நடைபெற்ற சட்டமன்ற பேரவைத் கூட்டத்தொடரில், சட்டப்பேரவை விதி 110ன் கீழ் 1987ஆம் ஆண்டு இடஒதுக்கீட்டு போராட்டத்தில் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான 21 சமூக நீதி போராளிகளின் தியாகத்தை மதிக்கக்கூடிய வகையில் மணிமண்டபம் அமைக்கப்படும் என அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

மேலும், சட்டமன்ற பேரவை கூட்டத்தொடரில், 2021– 2022 ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மானியக் கோரிக்கையின் பாது முன்னாள் அமைச்சரும் ஏழை எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பெரும் பங்காற்றி மறைந்த தனிப்பெரும் தலைவரும், பேறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் அமைச்சரவையில் சிறப்புடன் பணியாற்றிய வருமான ஏ.கோவிந்தசாமி நினைவாக விழுப்புரம் மாவட்டத்தில் திருவுருவச்சிலையுடன் கூடிய நினைவு அரங்கம் அமைக்கப்படும் எனவும் அறிவித்தார்கள்.

அதனடிப்படையில், இன்றைய தினம், விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டியில், 1.12.0 ஹெக்டேர் பரப்பளவில், ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கான நினைவு அரங்கம் 545.00 ச.மீ பரப்பளவிலும், ரூ.5.70 கோடி மதிப்பீட்டில் 21 சமூக நீதி போராளிகளுக்கான மணிமண்டபம் 782.00 ச.மீ பரப்பளவில் மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது.

மேலும், இதில், நூலகம், காப்பாளர் அறை, உணவுக்கூடம், கழிப்பறை போன்ற கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகைபுரிந்து, 28.11.2024 மற்றும் 29.11.2024 ஆகிய தேதிகளில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளின்போது, முன்னாள் அமைச்சர் கோவிந்தசாமி நினைவு அரங்கம் மற்றும் 21 சமூக நீதி போராளிகளுக்கான மணிமண்டபத்தினை திருக்கரங்களால் திறந்து வைக்க உள்ளதால், பணிகள் நிறைவு தொடர்பாக இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என தெரிவித்தார்

ஆய்வின்போது, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.கௌதம சிகாமணி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், விழுப்புரம் நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, கோலியனூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் சச்சிதாநந்தம், நகர்மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் பரிதி, செயற்பொறியாளர் செல்வக்குமார், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மக்கள் குறைதீர்க்கும் கூட்டம்



**விழுப்புரம், நவ. 19–**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாரம் தோறும் திங்கட்கிழமை மாவட்ட ஆட்சித் தலைவர் பழனி தலைமையில் நடைபெறும் மக்கள் குறை தீர்ப்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 441 மனுக்களுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என மாவட்ட ஆட்சியர் பழனி சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து சுமார் 441 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. அதில் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, வீட்டுமனை பட்டா கோருதல், ஆதரவற்றோர் உதவித் தொகை, பட்டா மாறுதல், தொழில் தொடங்க கடனுதவி கோருதல், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம், அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், கலைஞரின் கனவு இல்லம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை நேரடியாக பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், முதல்வரின் முகவரி மனுக்கள் மற்றும் அமைச்சர் பெருமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனடி தீர்வு காண வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து, விக்கிரவாண்டி வட்டம், பெரியபாபு சமுத்திரம் கிராமத்தினைச் சேர்ந்த நரேஷ், நீரில் மூழ்கி இறந்ததை யொட்டி, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1 லட்சத்திற்கான காசோலையினை இறந்தவரின் தாயிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்ருதஞ்ஜெய் நாராயணன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யோகஜோதி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) முகுந்தன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் தமிழரசன், மாவட்ட வழங்கல் அலுவலர் சந்திரசேகர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வளர்மதி, துணை ஆட்சியர் (பயிற்சி) பிரேமி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# மண்ணாடிப்பட்டு தொகுதியில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச மனைப்பட்டா-துறை அதிகாரிகளுடன் அமைச்சர் ஆலோசனை



**புதுச்சேரி, நவ. 19–**

புதுச்சேரி மண்ணாடிப்பட்டு தொகுதிக்குட்பட்ட தேத்தாம் பாக்கம், சந்தை புதுக்குப்பம் பகுதியில் உள்ள வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்குவது சம்மந்தமாக துறை சார்ந்த அதிகாரிகளுடன் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், ஆலோசனை நடத்தினார்.

மேலும், மண்ணாடிப்பட்டு தொகுதியில் அனைத்து பகுதிகளிலும் விளையாட்டு மைதானம் அமைப்பது, கோவில்கள் மேம்படுத்துவது, குளங்கள் தூர் வாருவது, தார்சாலை மேம்படுத்துதல், கழிவு நீர் வாய்க்கால் மேம்படுத்துதல், மின்துறை மேம்படுத்துதல், குடிநீர் தேக்க தொட்டி கட்டுதல் போன்ற பல்வேறு மண்ணாடிப்பட்டு தொகுதி வளர்ச்சி திட்டங்கள் குறித்தும் துறை சார்ந்த அதிகாரிகள், மின்துறை கண்காணிப்பாளர் சண்முகம், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இயக்குநர் இளங்கோவன். இந்து அறநிலையத் துறை ஆணையர் சிவசங்கரன், நல ஆய்வாளர் ராஜா ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார். தொடர்ந்து அனைத்து வளர்ச்சி திட்டங்களும் உடனடியாக செயல்படுத்த வேண்டும் என அதிகாரிகளுக்கு அமைச்சர் நமச்சிவாயம் உத்தரவிட்டார்.

# இளைஞர் காங்கிரஸ் சார்பில் இந்திராகாந்தி பிறந்தநாள் விழா



**தென்காசி, நவ. 19–**

தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் சார்பாக தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் முன்னாள் பாரத பிரதமர் இந்திரா காந்தி பிறந்த நாள் விழா தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும், கடையம் ஒன்றிய குழு உறுப்பினருமான மாரி குமார் தலைமையில் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவர் விச்சு லெனின் பிரசாத் அறிவுறுத்தல்படி சமுதாயத்தில் சமூக சேவைகளை திறம்பட செய்து வரும் பெண்களுக்கு அன்னை இந்திரா காந்தி விருது தென்காசி மாவட்டத்தில் உள்ள நுண் நிதி நிறுவனங்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பாதுகாவலராக நிற்கும் கடையம் வட்டார மகளிர் காங்கிரஸ் தலைவி சீதாலட்சுமி பார்வதி நாதனுக்கும், கடையம் ஊராட்சி மன்றத்தில் தொடர்ந்து நான்காவது முறையாக ஊராட்சி மன்ற உறுப்பினராக உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற பூமாரி சுப்பையாவுக்கும் வழங்கப்பட்டது.

# அலைடு ஹெல்த் சயின்ஸ் துறை சார்பில் தேசிய வலிப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி



**சேலம், நவ. 19–**

விநாயகா மிஷனின் விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் சார்பில் தேசிய வலிப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

தேசிய வலிப்பு தினம் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் வலிப்பு நோய் குறித்த விழிப்புணர்வை அனைவருக்கும் ஏற்படுத்தும் நோக்கில் கடைபிடிக்கப் பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு விநாயகா மிஷனின் விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் நரம்பியல் தொழிற்நுட்ப பிரிவின் மூலம் விழிப் புணர்வு நிகழ்ச்சி பல்கலைக் கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் வழிகாட்டுதலின்படி நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு துறையின் டீன் பேராசிரியர் டாக்டர். செந்தில்குமார் முன்னிலை வகித்து வரவேற்புரை வழங்கினார். சிறப்பு அழைப்பாளராக விம்ஸ் மருத்துவ மனையின் நரம்பியல் பிரிவு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர்.பாரி கொடியரசன் அவர்கள் பங்கேற்று வலிப்பு நோய் வருவதற்கான காரணங்கள் தடுக்கும் முறைகள், சிகிச்சை முறைகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் துறையின் நரம்பியல் தொழிற்நுட்ப பிரிவு மாணவர்கள் மௌன மொழி நாடகம் வாயிலாகவும் மாணவர்களுக்கு இதனை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர். தொடர்ந்து மாணவர்கள் ஒன்றிணைந்து வலிப்பு நோய் சார்ந்த சின்னத்தையும் வடிவமைத்தனர். இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் நரம்பியல் தொழிற்நுட்ப பிரிவின் பொறுப்பாளர் காலிஸ் விஜய் செய்திருந்தார்.

# 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா




**தேனி, நவ. 19–**

தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட என்.ஆர்.டி. மண்டபத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் நடைபெற்ற 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் ரூ.10.47 கோடி மதிப்பிலான அரசின் பல்வேறு கடனுதவிகளை 1039 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஷஜீவனா, தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார் முன்னிலையில் வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, நகர்மன்ற தலைவர்கள் ரேணுபிரியா பாலமுருகன் (தேனி அல்லிநகரம்), சுமிதா சிவக்குமார் (பெரியகுளம்), மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் வாஞ்சிநாதன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஆரோக்கிய சுகுமார், துணைப்பதிவாளர் செல்வராஜு, இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) கோயில் ராஜா, மாவட்ட வழங்கல் அலுவலர் மாரிசெல்வி, திட்டக்குழு உறுப்பினர் நாராயண பாண்டி மற்றும் கூட்டுறவு சங்க பணியாளர்கள், அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# 100 மில்லியன் பயனர்களையும் 6.6 பில்லியன் கேம் ப்ளேக்களையும் பெற்று லூடோ கேமிங் தளமான ஜூபீ சாதனை

**கோவை, நவ. 19–**

2024 திறன் அடிப்படையிலான லூடோ கேமிங்கில் முன்னோடியான ஜூபீ நிறுவனமானது, வியக்க வைக்கும் வகையில் 100 மில்லியன் பயனர்களை எட்டியுள்ளது. அதோடு, திறமை அடிப்படையிலான ஆன்லைன் லூடோவின் தவிர்க்க முடியாத ராஜாவாக அதன் பலத்தை நிரூபித்துள்ளது. இந்த வரலாற்று சிறப்புக்குரிய மைல்கல்மூலமாக, நாடு முழுவதும் உள்ள திறன் சார்ந்த லூடோ பிரியர்களுக்கான விருப்பமான தளமாக ஜூபீ ஆனது தனித்து நிற்கிறது. அது மட்டுமல்ல, 6.6 பில்லியன் கேம் ப்ளேக்களையும் பெற்று புதிய சாதனையை படைத்துள்ளது. அதி நவீன கண்டு பிடிப்புகளுடன் சுவாரஸ்யத்தை கலப்பதன்மூலம், லூடோ மற்றும் ஸ்னேக்ஸ் –லேடர்ஸ் மீதான நாட்டின் ஆர்வத்தை ஜூபீ மீண்டும் தூண்டியுள்ளது. ஜூபீ நிறுவனமானது 100 மில்லியன் பயனர்களை எட்டிய அசுர வளர்ச்சியானது, இது ஒரு கேமிங் பிளாட்ஃபார்ம் என்பதற்கும் மேலானது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இது ஒரு புரட்சியாகும் என்று ஜூபீ இன்நிறுவனர் மற்றும் சி இ ஓ தில்ஷெர்மல்ஹி கூறினார்.” கேமிங் துறையில் பொறுப்புடன் முன்னணியில் இருக்கும் ஜூபீ ஆனது பயனர்களை ஸ்மார்ட்டாக விளையாடுவதற்கு அதிகாரம் அளிக்கும் அம்சங்களை கொண்டுள்ளது. அதன்படி, நேரம் மற்றும் செலவுக்கு வரம்புகளை நிர்ணயித்துள்ளது. ஆர்என்ஜி சான்றிதழுடன் நியாயத்தன்மை மற்றும் பிளாக் செயின் தொழில்நுட்பம் ஒவ்வொரு விளையாட்டின் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கிறது. ஜூபீ கேமிங் உலகில் நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மையில் முன்னணியில் உள்ளது.

## மாணவ, மாணவிகளுக்கு காசோலை வழங்கல்



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கோவை மாவட்டத்தில் 5 கட்டங்களாக நடைபெற்ற நான் முதல்வன் உயர்வுக்கு படி உயர்கல்வி முகாமில் தெரிவு செய்யப்பட்ட 29 மாணவ, மாணவியர்களுக்கு ஜி.டி தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் உயர்கல்வி பயில ஏதுவாக ரூ.3.32 லட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி வழங்கினார்.

## விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணி



இந்திய ராணுவத்தின் மதராஸ் இன்ஜினியரிங் பிரிவு தொடங்கி 244வது ஆண்டு நிறைவடைந்ததை தொடர்ந்து இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வேலூர் மாவட்டத்திற்கு மின்சார இருசக்கர வாகனத்தில் வருகைபுரிந்த லெப்டினாண்ட் விஷால் தாக்கூர் தலைமையிலான குழுவினரை வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி கொடியசைத்து வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், முன்னாள் ராணுவத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஆட்சியர் அலுவலகம் முன்பு கிராம மக்கள் போராட்டம்



**விழுப்புரம், நவ. 19-**

விழுப்புரம் மாவட்டம், காணை ஒன்றியம் அரியலூர் திருக்கை அடுத்த கொண்டியங்குப்பம் ஊராட்சி பரப்பளவிலிருந்து, டட்நகர் என்ற புதிய ஊராட்சிக்கு எல்லையை பிரித்து கொடுக்க ஊராட்சி மன்ற தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர்கள், கிராம மக்கள் கடுமையான ஆட்சேபனை தெரிவித்து சாலை மறியல் போராட்டம் நடத்த திட்டமிருந்தனர். இதனை தடுக்கும் வட்டாட்சியர் முன்னிலையில் இரு தரப்பினரிடையே சமாதன பேச்சுவார்த்தை நடந்தது. இதில் எதிர்தரப்பு டட்நகர் ஊராட்சியில் உள்ள நில உடமைதாரர்களை டட்நகரில் சேர்ப்பதாகவும், அரியலூர்திருக்கை ஊராட்சியில் உள்ள நில உடமைதாரர்களை அரியலூர்திருக்கை எல்லையிலேயே சேர்ப்பதாகவும் ஏற்றுக்கொண்டு சமாதானத்துக்கு கட்டுப்பட்டு கையெழுத்து போட்டனர். அதன்பின் வருவாய் துறை அலுவலர்கள் மற்றும் 5 சர்வேயர்கள் குழு அமைக்கப் பட்டு டட் நகர் கிராமப் பொது மக்களுக்கு சாதகமாக, பேச்சுவார்த்தைக்கு முரண்பாடாக அரியலூர்திருக்கை எல்லை பரப்பளவை டட்நகர் ஊராட்சிக்கு சேர்க்க முயற்சி செய்வதாக கூறப்படுகிறது. இதனை கண்டித்து நேற்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது மாவட்ட ஆட்சியர் எங்கள் கிராமப் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று அரியலூர்திருக்கை கிராம உடமைதாரர்களின் சொத்தை அதே கிராமத்திற்கே சேர்க்கவும், டட்நகர் ஊராட்சி உடமைதார்களின் சொத்துக்களை டட்நகர் கிராம பஞ் சாயத்திற்கே சேர்க்கவும் முன்னெச்சரிக்கை அதாவது அரியலூர்திருக்கை என ஊர் பொதுமக்கள் நடவடிக்கையாக, விழுப்புரம் உடமைதாரர்களின் சொத்தை கோரிக்கை வைத்துள்ளனர்.

## மரச்சிற்ப கைவினை கிராமம் அமைப்பது தொடர்பாக அதிகாரிகள் ஆய்வு



சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், தம்மம்பட்டியில் "மரச்சிற்ப கைவினை கிராமம்" அமைப்பது தொடர்பாக கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை அரசுச் செயலாளர் அமுதவல்லி, தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் அமிர்தஜோதி, மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி, ஆகியோர் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.

## 100 சதவீதம் வாக்குப்பதிவு விழிப்புணர்வு கோலப்போட்டி



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த மகளிர் குழுக்களின் பங்கேற்புடன் நடைபெற்ற கோலப்போட்டியை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டார்.

## போதைப்பொருள் தடுப்பு ஆய்வுக் கூட்டம்



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையின் சார்பில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பான மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா.

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன்.

## கோரிக்கை மனுக்களை பெற்ற ஆட்சியர்



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜராஜன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஷோபா.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007

# பாராளுமன்றம் 25ந்தேதி கூடுகிறது

# 23ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகிறது

# கடல் நீரை குடிநீராக்கும் ஆலையில் 16வது நிதிக்குழு ஆய்வு


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

• 19-11-2024 செவ்வாய்க்கிழமை •வெளியூர்: 20-11-2024 புதன்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்